www.agaram.lk

14396



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

ව්‍යාපාර අධ්‍යයනය I
வணிகக் கல்வி I
Business Studies I

32 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள்:**

* **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
* மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது **சுட்டெண்ணைத்** தெளிவாக எழுதுக.
* **1** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.
* **31** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

சுட்டெண் : ..................................

பரீட்சகரின் உபயோகத்திற்கு மாத்திரம்

| வினாத்தாள் I | |
|---|---|
| வினா இல. | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

| | கையொப்பம் | குறியீட்டு இல. |
|---|---|---|
| 1 வது பரீட்சகர் | | |
| 2 வது பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |

**1.** தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றுவதற்காகப் பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்யும் போது நுகர்வோர் ஒருவரால் அடிப்படையில் கருத்திற்கொள்ள வேண்டிய காரணிகள்
(1) செலவீனங்கள் மற்றும் பொதி
(2) பொதி மற்றும் தரம்
(3) திருப்தி மற்றும் வியாபாரப் பெயர்
(4) செலவீனங்கள் மற்றும் வியாபாரப் பெயர்
(5) செலவீனங்கள் மற்றும் திருப்தி (......)

**2.** பின்வருவனவற்றுள் ஆரம்பத்தில் இருந்தே பூகோளச் சந்தையைக் குவிமையமாகக் கொண்டு உருவாகிய வணிகம் (Born Global)
(1) மோட்டார் வாகனங்கள் (Motor vehicles)
(2) மின் உபகரணங்கள் (Electrical equipment)
(3) ஆடைத்தொழில் (Apparel)
(4) கட்டுமானங்கள் (Constructions)
(5) சமூக வலைத்தளப் பக்கங்கள் (Social network sites) (......)

**3.** பின்வருவனவற்றுள் ஒரு நவீன வணிகப்போக்கு **அல்லாதது** எது?
(1) பூகோளமயமாதல்
(2) இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல்கள்
(3) பேரளவு உற்பத்தி
(4) பசுமை உற்பத்தி
(5) வணிக வெளிமூலங்கள் (Business outsourcing) (......)

**4.** பின்வரும் அட்டவணையில் முறையே **X** நிரலானது வணிக வகைப்படுத்தலுக்கான சில அடிப்படைகளையும் **Y** நிரலானது அவ்வடிப்படைகளுடன் தொடர்புடையதான சில உதாரணங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A. உடைமை | 1. இரத்தினக்கல் அகழ்வு |
| B. குறிக்கோள் | 2. அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனம் |
| C. அளவுத்திட்டம் | 3. இரத்தினக்கல் பட்டை தீட்டுதல் (மினுக்குதல்) |
| D. கைத்தொழில் மூலம் | 4. இரத்தினக்கற் கைத்தொழிலுக்கான இலவச அறிவுரை |
| E. உற்பத்தியின் தன்மை | 5. இரண்டு ஊழியர்களுடனான இரத்தினக்கல் வணிகம் |

ஒவ்வொரு வணிக வகைப்படுத்தலுக்கான அடிப்படைகளும் பொருத்தமான உதாரணங்களுடன் சரியாகப் பொருந்தும் தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) A - 2, B - 5, C - 3, D - 4, E - 1
(2) A - 2, B - 4, C - 5, D - 1, E - 3
(3) A - 2, B - 3, C - 4, D - 1, E - 5
(4) A - 1, B - 3, C - 2, D - 5, E - 4
(5) A - 4, B - 2, C - 5, D - 1, E - 3 (......)

[பக். 2 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**5.** சாமந்தி என்பவர் வெதுப்பக உற்பத்திப்பொருட்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்வதற்காக 'சாமந்தி ஹோட்டல்' என்னும் வணிகத்தை மாகாணசபையின் அனுமதியுடன் ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு அண்மையிலுள்ள தனது வீட்டில் தாபித்தார். இவர் இரு வேலையாட்களை வேலைக்கு அமர்த்தியிருந்ததுடன் ஹோட்டலின் முகாமையைத் தனது மகனிடத்தில் ஒப்படைத்திருந்தார்.
இதன்படி சாமந்தியின் வணிகத்தில் அக்கறையுடைய தரப்பினரின் எண்ணிக்கை

(1) 3 (2) 4 (3) 5 (4) 6 (5) 7 (......)

**6.** பின்வரும் அட்டவணையானது சில பேரண்டச் சூழல் காரணிகளையும் அக்காரணிகளுக்கான உதாரணங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

| பேரண்டச் சூழல் காரணிகள் | உதாரணங்கள் |
|---|---|
| A. மக்கட்தொகை | 1. றோபோ தொழில்நுட்ப அபிவிருத்தி |
| B. தொழினுட்பம் | 2. முதியோர் சனத்தொகை அதிகரிப்பு |
| C. பொருளாதாரம் | 3. உலக எண்ணெய் விலை அதிகரிப்பு |
| D. அரசியல் | 4. பாவனைக்கான பொலித்தீனின் தடிப்பு தொடர்பிலான நிபந்தனை |
| E. சட்டம் | 5. ஐந்தாண்டுத் தேசிய அபிவிருத்தித் திட்டத்தைச் சமர்ப்பித்தல் |

பேரண்டச் சூழல் காரணிகளும் உதாரணங்களும் சரியாகப் பொருந்தும் தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A - 1, B - 2, C - 3, D - 4, E - 5
(2) A - 4, B - 5, C - 2, D - 3, E - 1
(3) A - 2, B - 1, C - 3, D - 5, E - 4
(4) A - 4, B - 3, C - 5, D - 2, E - 1
(5) A - 2, B - 1, C - 5, D - 3, E - 4 (......)

**7.** பின்வரும் அட்டவணையானது வணிகமொன்று, தனது அக்கறையுடைய தரப்பினர் நோக்கில் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக எடுத்த சில நடவடிக்கைகளையும், அக்கறையுடைய தரப்பினர்களைக் கொண்ட ஒரு பட்டியலையும் எடுத்துக் காட்டுகின்றது.

| நடவடிக்கைகள் | அக்கறையுடைய தரப்பினர் |
|---|---|
| A. நிறுவனத்துக்குள்ளே வைத்திய அலகொன்றைத் தாபித்தல் | 1. அரசாங்கம் |
| B. நாட்டைக் கட்டியெழுப்பும் வரிக்குப் பங்களிப்புச் செய்தல் | 2. வாடிக்கையாளர் |
| C. நியமங்களுக்கு அமைவாகக் கணக்கு அறிக்கைகளைத் தயாரித்தல் | 3. ஊழியர்கள் |
| D. பொருட்களின் உள்ளடக்கங்களைச் சுட்டுத்துண்டில் காட்சிப்படுத்துதல் | 4. உடைமையாளர் |

மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளையும் பொருத்தமான அக்கறையுடைய தரப்பினரையும் சரியாக எடுத்துக் காட்டும் தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A - 1, B - 3, C - 2, D - 4
(2) A - 1, B - 3, C - 4, D - 2
(3) A - 2, B - 4, C - 3, D - 1
(4) A - 3, B - 1, C - 2, D - 4
(5) A - 3, B - 1, C - 4, D - 2 (......)

**8.** வணிக நிறுவனம் தனது போட்டியாளர்களைக் கருத்திற் கொண்டு உருவாக்கும் ஓர் ஒழுக்க நெறி
(1) சகல ஊழியர்களையும் சமமாக நடாத்துதல்
(2) விளம்பரப்படுத்தலின்போது ஏனைய வணிகங்களின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தாதிருத்தல்
(3) சமயக் குறியீடுகளை வணிக நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தாதிருத்தல்
(4) உயர் தரமுடைய பொருட்களை வழங்குதல்
(5) முதியோரைக் கனம் பண்ணுதல் (......)

**9.** பின்வருவருவனவற்றுள் எதனை ஓர் அரசாங்க வரி வருமானமாகக் கருத்திற்கொள்ள முடியும்?
(1) சாரதி அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்
(2) புகையிரதக் கட்டணங்கள்
(3) இறை வரிக்கட்டணம்
(4) தபாற் கட்டணங்கள்
(5) வங்கிக் கட்டணங்கள் (......)

**10.** பின்வருவனவற்றுள் வியாபார நெறிமுறையற்ற நடவடிக்கையாக எதனைக் கருத முடியும்?
(1) உரிய திகதியில் ஊழியர்களின் சம்பளங்களை வழங்காதிருத்தல்
(2) வியாபார ஸ்தலத்தை சுத்தமாகப் பேணாதிருத்தல்
(3) ஊழியரை வேலையில் இருந்து நீக்குதல்
(4) குறிக்கப்பட்டுள்ள விலையை விட உயர்வான விலைக்கும் பொருட்களை விற்பனை செய்தல்
(5) வாடிக்கையாளர்களுடன் சிறந்த உறவுமுறையை பேணாதிருத்தல் (......)

**11.** அங்கீகார வணிகத்தினூடாக அங்கீகாரம் பெறுபவருக்குக் கிடைக்கும் ஓர் அனுகூலம்
(1) முதலீட்டு இடர் இன்மை
(2) இலாபங்களின் நிச்சயத்தன்மை
(3) குறைந்த கிரயத்தில் அங்கீகார வணிக உரிமத்தைப் (அனுமதிப்பத்திரத்தை) பெறமுடிதல்
(4) வணிகச் செயற்பாடுகளைச் சுதந்திரமாகக் கொண்டு நடாத்த முடிதல்
(5) அங்கீகாரம் வழங்குபவரிடமிருந்து பயிற்சி மற்றும் அறிவுரைகளைப் பெற முடிதல் (......)

[பக். 3 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**12.** 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கக் கம்பனிச் சட்டத்தில் காணப்படும் பங்குடைமை சம்பந்தமான ஒரு விடயம்

(1) பங்காளருடைய பிணக்குகளுக்கான பிரேரணை (2) பங்காளர் மூலதனம்
(3) பங்குடைமைகளுக்கான பதிவு (4) பங்காளர் எண்ணிக்கை
(5) பங்குடைமைகளின் கலைப்பு (......)

**13.** பின்வருவன பல்வேறு வகையான வணிகங்களின் சில குணவியல்புகள் ஆகும்.

A - வருடாந்தக் கணக்கு அறிக்கைகளைப் பிரசுரித்தல்
B - உடைமையாளர்களிடமிருந்து வேறுபட்ட சட்ட ரீதியான அலகாகக் காணப்படுதல்
C - நிர்வாகத்தில் உடைமையாளர்களின் ஈடுபாடு கட்டாயமானதாக இருத்தல்
D - பதிவுசெய்தல் கட்டாயமானதாக இருத்தல்
E - திறனுள்ள முகாமையாளர்களை ஆட்சேர்ப்புச் செய்ய முடிதல்
F - உடைமையாளர்களின் நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்டதாகக் காணப்படுதல்

மேலே தரப்பட்டவற்றுள் வரையறுத்த பொதுக் கம்பனிகளுக்கு (PLC) உரிய குணவியல்புகளை மட்டும் கொண்டுள்ள தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A, B, C, D (2) A, B, D, E (3) A, B, D, F (4) A, C, D, F (5) C, D, E, F (......)

**14.** கூட்டுறவு அமைப்புடன் தொடர்புடைய சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - ஜனநாயக அங்கத்துவக் கட்டுப்பாடு
B - அரசாங்கம் பற்றிய அக்கறை
C - கூட்டுறவுக் கல்வி, பயிற்சி மற்றும் தகவல்களை வழங்குதல்
D - குறைவான கிரயத்தில் பொருட்கள் சேவைகளை விற்பனை செய்தல்
E - சுயாதீனம் மற்றும் சுதந்திரம்
F - பல்வேறு வகைப்பட்ட வணிகத் தொழிற்பாடுகளில் ஈடுபடல்

மேலே தரப்பட்டவற்றுள் கூட்டுறவுக்கான கொள்கைகளை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதி எது?

(1) A, B, C (2) A, B, E (3) A, C, E (4) A, C, F (5) B, D, E (......)

**15.** முயற்சியாண்மையின் மூலம் முயற்சியாளர் ஒருவருக்கு கிடைக்கும் தனிப்பட்ட அனுகூலம்

(1) மொத்த உள்நாட்டு வருமானம் அதிகரித்தல்
(2) வேலைவாய்ப்பு அதிகரித்தல்
(3) சமூக அந்தஸ்து மற்றும் அங்கீகாரம் அதிகரித்தல்
(4) புதிய பொருட்கள் சேவைகளை நுகர்வதற்கான வாய்ப்புகள் அதிகரித்தல்
(5) மக்களின் வாழ்க்கைத் தரம் அதிகரித்தல் (......)

**16.** 'சமூக முயற்சியாண்மை' என்பதை மிகவும் சரியாக விவரிப்பது

(1) இடம்பெயர்ந்த மக்களுக்காகக் கூடாரங்களை வழங்குதல்
(2) பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகங்களை வழங்குதல்
(3) தமது வணிகத்தில் குடும்ப அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளல்
(4) எரிபொருள் நுகர்வைக் குறைக்கக்கூடிய வகையில் ஒரு புதுமையான உபகரணத்தைத் தயாரித்தல்
(5) இயலாமையுடைய இளவயதினருக்காக நிறுவனத்துக்குள்ளே 10% வேலைவாய்ப்பை வழங்குதல் (......)

**17.** தன்னியக்க வங்கிச் சேவைகளின் (Automated Banking Services) மூலம் வங்கிக்கு மட்டும் கிடைக்கக்கூடிய ஓர் அனுகூலம்

(1) நேரத்தைச் சேமிக்க முடிதல்
(2) சேவை விரிவாக்கத்தின் மூலம் அதிக இலாபத்தை உழைக்கக்கூடியதாக இருத்தல்
(3) பட்டியல் கொடுப்பனவுகளை இலகுவாகச் செலுத்தக்கூடியதாக இருத்தல்
(4) கணக்குகள் தொடர்பான தகவல்களை இலகுவாகப் பெறக்கூடியதாக இருத்தல்
(5) கணக்குகளுக்கிடையே நிதிகளை மாற்றக்கூடியதாக இருத்தல் (......)

**18.** 'இலத்திரனியல் வணிகங்கள்' (e - business) என்பதனைச் சரியாக விவரிக்கின்ற கூற்று

(1) கணினிகள் ஊடாக வியாபாரச் செயற்பாடுகளில் ஈடுபடல்
(2) கொடுக்கல்வாங்கல்களுக்காக வலையமைப்புகளைப் பயன்படுத்துதல்
(3) ஒட்டுமொத்த வணிகச் செயன்முறையைச் செயற்படுத்துவதற்காக வலையமைப்பைப் பயன்படுத்துதல்
(4) கொடுக்கல்வாங்கல்களுக்காக இலத்திரனியல் பணத்தைப் பயன்படுத்துதல்
(5) வணிக நிறுவனங்களின் கணக்குகளைத் தயாரிப்பதற்காக மென்பொருள்களைப் பயன்படுத்துதல் (......)

**19.** ஏற்றுமதி நடைமுறையின்போது ஏற்றுமதியாளர் ஒருவருக்குத் தனது பொருட்களுக்கான உறுதியான பெறுவனவை உறுதி செய்கின்ற முறை எது?

(1) வார்நாமம் (2) நாணயக் கடிதம்
(3) வாக்குறுதிச் சீட்டு (4) காப்புறுதிப் பத்திரம்
(5) காசோலை (......)

[பக். 4 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**20.** இணையத்தினூடு வழிவருமுறையிலான கொள்வனவுகளுக்கு (Online Purchasing) மட்டும் பொருத்தமான தனித்துவமானதொரு குணவியல்பு
(1) பொருட்களைத் தெரிவுசெய்யக்கூடியதாக இருத்தல்
(2) விலைகளை ஒப்பிடக்கூடியதாக இருத்தல்
(3) தேவையான பொருட்கள் தொடர்பில் மட்டும் கவனம் செலுத்தக்கூடியதாக இருத்தல்
(4) கடன் அட்டை மூலம் கொடுப்பனவைச் செய்யக்கூடியதாக இருத்தல்
(5) பேரம் பேசக்கூடியதாக இருத்தல் (……)

**21.** வணிக நிறுவனம் ஒன்றின் வினைத்திறனை அடைந்துகொள்வதற்கு வசதி செய்கின்ற ஒரு காரணி
(1) சூழலுக்கு இசைவாதல் (2) முறையாகத் திட்டங்களைத் தயாரித்தல்
(3) சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல் (4) வள விரயங்களைக் குறைத்தல்
(5) போட்டிகளுக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்தல் (……)

**22.** நிறைவேற்று ஆதார முறைமை (Executive Support Systems) பற்றிய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) நடுத்தர முகாமைத் தீர்மானம் எடுத்தலுக்கு ஆதரவான ஒரு முறைமையாகும்.
(2) உயர் முகாமைத் தீர்மானம் எடுத்தலுக்கு ஆதரவான ஒரு முறைமையாகும்.
(3) தொடர்பாடல் செயன்முறைக்கு ஆதரவான ஒரு முறைமையாகும்.
(4) பருவகால அறிக்கைகளைத் தயாரிப்பதற்குரிய தகவல்களை வழங்கும் ஒரு முறைமையாகும்.
(5) நாளாந்த செயற்பாடுகள் தொடர்பான தரவுகளைப் பதிவு செய்வதற்கான ஒரு முறைமையாகும். (……)

**23.** உயர்மட்ட முகாமையாளர்களுக்கு எக்காரணத்தினால் எண்ணக்கருவாக்கத் திறன் முக்கியமானதாகக் காணப்படுகின்றது?
(1) நாளாந்த வணிக நடவடிக்கைகளின் வெற்றிக்காக
(2) தீர்மானங்கள் தொடர்பில் சிறந்த அமுல்படுத்தல்களுக்காக
(3) நபர்களுக்கிடையேயான (ஆளிடை) தொடர்புகளை முன்னேற்றுவதற்காக
(4) நீண்டகாலத் தந்திரோபாயத் தீர்மானங்களை மேற்கொள்வதற்காக
(5) கீழ்மட்ட முகாமையாளர்களை மேற்பார்வை செய்வதற்காக (……)

**24.** பின்வரும் அட்டவணையில் முறையே **X** நிரலானது முகாமைசார் பதவிநிலைகளுக்கான சோடிகளையும் **Y** நிரலானது திணைக்களப்படுத்தலுக்கான சில அடிப்படைகளையும் எடுத்துக் காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A. நிதி முகாமையாளர், சந்தைப்படுத்தல் முகாமையாளர் | 1. உற்பத்திப்பொருள் |
| B. ஆடை உற்பத்தி முகாமையாளர், தோற்பொருட்கள் உற்பத்தி முகாமையாளர் | 2. செயன்முறை |
| C. மொத்தச் சந்தைப்படுத்தல் முகாமையாளர், சில்லறைச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் | 3. தொழிற்பாடு |
| D. தரக்கட்டுப்பாட்டு முகாமையாளர், பொதிசெய்தலுக்கான முகாமையாளர் | 4. வாடிக்கையாளர் |

முகாமைசார் பதவிநிலைகளுக்கமைய திணைக்களப்படுத்தலுக்கான அடிப்படைகள் சரியாகப் பொருந்தும் தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) A - 1, B - 2, C - 3, D - 4 (2) A - 3, B - 1, C - 4, D - 2
(3) A - 3, B - 1, C - 2, D - 4 (4) A - 2, B - 4, C - 1, D - 3
(5) A - 2, B - 1, C - 4, D - 3 (……)

**25.** பின்வரும் அட்டவணையில் முறையே **X** நிரலானது சந்தைப்படுத்தல் தொடர்பாடல் கலவையையும் (விற்பனை மேம்படுத்தல் கருவிகளையும்) **Y** நிரலானது அது தொடர்பான சில உதாரணங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A. விளம்பரப்படுத்தல் | 1. அதிஷ்டலாபச் சீட்டுக் குலுக்கல் மூலம் வெகுமதிகள் வழங்கல் |
| B. விற்பனை மேம்படுத்தல்கள் | 2. தொலைக்காட்சி விளம்பரங்கள் |
| C. பொதுசனத் தொடர்புகள் | 3. வீட்டுக்கு வீடு விற்பனை செய்தல் |
| D. தனிப்பட்ட விற்பனை | 4. விளையாட்டுப் போட்டிக்கான அனுசரணை |

சந்தைப்படுத்தல் தொடர்பாடல் கலவையின்படி அது தொடர்பான உதாரணங்கள் சரியாகப் பொருந்தும் தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) A - 1, B - 4, C - 2, D - 3 (2) A - 2, B - 1, C - 4, D - 3
(3) A - 2, B - 3, C - 1, D - 4 (4) A - 3, B - 2, C - 4, D - 1
(5) A - 4, B - 2, C - 3, D - 1 (……)

**26.** ஊழியர் ஒருவரது தலைமைத்துவத் திறனை அதிகரிக்கச் செய்யும் பயிற்சி முறை
(1) தொழினுட்பப் பயிற்சி (2) நடத்தைசார் பயிற்சி
(3) வேலையின் போதான பயிற்சி (4) நகலான செயற்பாட்டுப் பயிற்சி (Simulation training)
(5) பயிலுனர் பயிற்சி (……)

[பக். 5 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

**27.** பின்வரும் அட்டவணையானது நிறுவனமொன்றின் சில நடவடிக்கைகளையும் முகாமைத்துவத் தொழிற்பாடுகளையும் எடுத்துக் காட்டுகின்றது.

| நடவடிக்கைகள் | தொழிற்பாடுகள் |
|---|---|
| A. தொழிற்பிரிப்பு | 1. திட்டமிடல் |
| B. ஊழியர் ஊக்கப்படுத்தல் | 2. ஒழுங்கமைத்தல் |
| C. நியமங்களை உருவாக்குதல் | 3. தலைமை வகித்தல் |
| D. சூழல்சார் பகுப்பாய்வு | 4. கட்டுப்படுத்தல் |

நிறுவன நடவடிக்கைகளின்படி முகாமைத்துவத் தொழிற்பாடுகள் சரியாகப் பொருந்தும் தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A - 1, B - 2, C - 3, D - 4
(2) A - 2, B - 1, C - 4, D - 3
(3) A - 3, B - 4, C - 2, D - 1
(4) A - 2, B - 3, C - 4, D - 1
(5) A - 4, B - 3, C - 2, D - 1 (......)

**28.** கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தின் நடவடிக்கைகளுடன் நேரடியாகத் **தொடர்புபடாத** தரப்பினர்

(1) பட்டியற்படுத்திய கம்பனிகள்
(2) கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்
(3) தரகுத்தொழில் கம்பனிகள்
(4) நம்பிக்கை வங்கிகள்
(5) பிணைகள் பரிமாற்று ஆணைக்குழு (......)

**29.** சாதாரண பங்கு மூலதனம், ஒதுக்கங்கள் ஆகியவற்றின் மொத்தத் தொகையிலும் பார்க்கக் கடன் மூலதனம் குறைவாகக் காணப்படும்போது அவ்விகிதமானது எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?

(1) உயர் இணைப்பு விகிதம்
(2) முதலீட்டின் மீதான திரும்பல் விகிதம்
(3) தாழ் இணைப்பு விகிதம்
(4) விரைவு விகிதம்
(5) நடைமுறை விகிதம் (......)

**30.** நேர் மற்றும் அக நிதி மூலம் ஒன்று

(1) பங்கு வழங்கல்
(2) வங்கிக் கடன்கள்
(3) தொகுதிக்கடன் வழங்கல்
(4) நிறுத்தி வைத்த இலாபங்கள்
(5) குத்தகை (......)

● **31** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்குப் **பொருத்தமான சொற்களைப்** பயன்படுத்தி வெற்றிடங்களை நிரப்புக.

**31.** (அ) சந்தையானது .................................... மற்றும் .................................... முறைகளில் கூட உருவாக்கப்பட முடியும்.

(ஆ) நுகர்வோர் பொருளின் விலை, தரம் மற்றும் பாங்கு (Style) என்பவற்றை ஒப்பிட்டு கொள்வனவு செய்யும் பொருட்கள் .................................... பொருட்கள் என அழைக்கப்படுவதுடன் விசேட முயற்சிகள் எதுவும் எடுக்காமல் அடிக்கடி கொள்வனவு செய்யும் பொருட்கள் .................................... பொருட்கள் என அழைக்கப்படும்.

**32.** (அ) நிறுவனமொன்றினது உடைமையாளர்கள், முகாமையாளர்கள் மற்றும் ஊழியர்களது நம்பிக்கைகள், விழுமியங்கள் மற்றும் மனப்பாங்குகள் போன்ற பலவற்றின் மீதான அடிப்படையில் அந்நிறுவனம்சார்ந்த ........................................... உருவாக்கப்படுகிறது.

(ஆ) இலங்கை மத்திய வங்கியானது அரசாங்கத்துக்கான குறுங்காலக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்காக ................................................... வழங்குவதுடன் நடுத்தர மற்றும் நீண்டகாலக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்காக ................................................... வழங்குகின்றது.

**33.** (அ) பங்குடைமை ஒன்று எழுத்து வடிவில் அல்லது ......................... அல்லது ............................. கூட உருவாக்கப்பட முடியும்.

(ஆ) கம்பனிகள் தமது .................................... மீதும் பங்குதாரர்களது .................................... மீதும் என அவை செலுத்தும் இரு வருமான வரிகளும் இரட்டை வரிவிதிப்பு (Double Taxation) என அழைக்கப்படும்.

[பக். 6 ஐப் பார்க்க.

agaram.lk

www.agaram.lk


**34.** பின்வரும் கூற்றுகள் தொடர்பில் **சரி, பிழையைக்** குறிப்பிடுக.

| கூற்று | சரி / பிழை |
|---|---|
| 1. தனியுடைமை வணிகமானது தனது பெயரில் வருமானவரியைச் செலுத்துகின்றது. | ............... |
| 2. இடர்களை ஏற்றுக்கொள்ளுதல் முயற்சியாண்மையின் ஒரு குணவியல்பு ஆகும். | ............... |
| 3. தரவு மற்றும் தகவல் ஆகியவற்றுக்கிடையே வேறுபாடு கிடையாது. | ............... |
| 4. மொத்த உற்பத்திக் கிரயத்தை உற்பத்தி செய்த அலகுகளின் எண்ணிக்கையால் பிரிப்பதன் மூலம் அலகொன்றின் உற்பத்திக் கிரயத்தைக் கணிப்பிட முடியும். | ............... |

**35.** (அ) காசோலை ஒன்று தொடர்பில் நடைமுறைக் கணக்கை வைத்திருப்பவர் ........................................ எனப்படும் அதேவேளை காசோலையின் மீது எவருடைய பெயர் எழுதப்படுகின்றதோ அந்நபர் ........................................ ஆவார்.

(ஆ) குறுங்கால (தற்காலிக) மேலதிகப்பற்று வசதிகளை ........................................ பிணையின் மூலம் பெற்றுக்கொள்ள முடிவதுடன் நீண்டகால (நிரந்தர) மேலதிகப் பற்று வசதிகளை ........................................ பிணையின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**36.** (அ) நிதி நிறுவனங்களின் வகைப்படுத்தலின்படி ஊழியர் நம்பிக்கை நிதியம் ஒரு ........................................ சேமிப்பு நிறுவனமாகக் காணப்படும் அதேவேளை முயற்சி மூலதனக் கம்பனிகள் (Venture capital companies) ........................................ நிதி நிறுவனங்களாகக் காணப்படும்.

(ஆ) இலத்திரனியல் பணக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும்போது அட்டை உடைமையாளர், வணிகர், .................................. மற்றும் .................................. ஆகிய தரப்பினர் சம்பந்தப்படுவர்.

**37.** (அ) மோட்டார் வாகனங்கள், அதில் பயணிக்கும் பயணிகள், வெளித்தரப்பினர் மற்றும் சகல ஆதனங்களுக்குமான சேதங்கள் ........................................ காப்புறுதிப் பத்திரத்தின் மூலம் உள்ளடக்கப்படுவதுடன், வெளித்தரப்பினருக்கும் ஆதனங்களுக்குமான சேதங்கள் மட்டும் ........................................ காப்புறுதிப் பத்திரத்தின் மூலம் உள்ளடக்கப்படுகின்றது.

(ஆ) உற்பத்தியாளர் ஒருவர் தனது உற்பத்திப்பொருட்களைத் தானாகவே ஏற்றுமதி செய்வது ........................................ முறை என அழைக்கப்படுவதுடன் வெளித்தரப்பினர் மூலம் ஏற்றுமதி செய்வது ........................................ முறை என அழைக்கப்படும்.

**38.** (அ) அறிவுசார் புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழ் புத்தகங்களுக்கான சட்டரீதியான உரிமை .................................. என அழைக்கப்படுவதுடன் புத்தாக்கம் ஒன்றின் தற்காலிக தனியுரிமைக்கான சட்ட ரீதியான உரிமை .................................. என அழைக்கப்படும்.

(ஆ) வணிகமொன்றின் பல்வேறுபட்ட உற்பத்திப்பொருட்களுக்கான வெவ்வேறு பண்டக்குறிப் பெயர்களது (Separate brand names) பாவனை .................................. பண்டக்குறி என அழைக்கப்படுவதுடன், கம்பனி ஒன்றின் உற்பத்திப்பொருள் வரிசைக்கான ஒரு ஒற்றைப் பண்டக்குறிப் பெயரின் (Single brand names) பாவனை ........................................ பண்டக்குறி என அழைக்கப்படும்.

**39.** (அ) ஒருவரால் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு பின்பற்றுவோர் மூலம் அமுல்படுத்தப்படுவது .................................. தலைமைத்துவம் என அழைக்கப்படுவதுடன் தீர்மானங்கள் சகலரினதும் பங்குபற்றுதல் மூலம் எடுக்கப்பட்டு பின்பற்றுவோர் மூலம் அமுல்படுத்தப்படுவது .................................. தலைமைத்துவம் என அழைக்கப்படும்.

(ஆ) நிறுவனமொன்றின் முகாமையாளர் ஒருவர் அவரது அறிவு, திறன்கள் ஆகியவற்றின் மூலம் ........................................ வலுவைக் கொண்டிருப்பதுடன் ஊழியர்களுக்குத் தூண்டுதலை ஏற்படுத்தத்தக்க வகையில் ........................................ வலுவைக் கொண்டிருப்பார்.

[பக். 7 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**40.** வணிகமொன்றுடன் தொடர்புடைய பின்வரும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் பொருத்தமான மனிதவள முகாமைத்துவத் தொழிற்பாட்டுப் பணியை தரப்பட்டுள்ள இடைவெளியில் எழுதுக.

| நடவடிக்கைகள் | மனிதவள முகாமைத்துவப் பணி |
|---|---|
| 1. புதிய ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கான பத்திரிகை விளம்பரமொன்றை வெளியிடல் | ........................................ |
| 2. விண்ணப்பதாரிகளின் பொது அறிவை மதிப்பிடுவதற்காக எழுத்துப் பரீட்சை நடத்துதல் | ........................................ |
| 3. புதிய ஊழியரொருவர் வேலையில் ஈடுபடுவதன் மூலம் வேலைப்பணிகளைக் கற்றுக் கொள்ளல் | ........................................ |
| 4. ஊழியர்களின் விளைவுகளை மதிப்பிடுவதற்கான புள்ளித்திட்டமொன்றை அறிமுகப்படுத்துதல் | ........................................ |

- **41** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்குப் **பொருத்தமான விடைகளை** எழுதுக.

**41.** வணிகம் ஒன்றுக்கு அதன் ஆரம்பம் முதல் இறுதிவரை பல்வேறு வகையான ஆதரவுச் சேவைகள் தேவைப்படுகின்றன. இலங்கையில் அவ்வாறான சேவைகளை வழங்கும் அரசாங்க நிர்வாகக் கட்டமைப்பு மட்டங்கள் **நான்கைப்** பெயரிடுக.

1. ........................................ 2. ........................................

3. ........................................ 4. ........................................

**42.** வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் சந்தை அளவையாய்வை (Survey) மேற்கொள்ளும்போது கருத்திற்கொள்ள வேண்டிய **நான்கு** பிரதான காரணிகளை எழுதுக.

1. ........................................
2. ........................................
3. ........................................
4. ........................................

**43.** வழங்குனர்கள் வணிகமொன்றுக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடிய **நான்கு** வழிகளை எழுதுக.

1. ........................................
2. ........................................
3. ........................................
4. ........................................

**44.** இலங்கை தர நிறுவகத்தால் நியமங்களை அமுல்படுத்தும்போது பயன்படுத்தப்படும் **நான்கு** முறைகளைக் குறிப்பிடுக.

1. ........................................
2. ........................................
3. ........................................
4. ........................................

**45.** திட்டங்களைத் தயாரிக்கும் போதுள்ள **நான்கு** தத்துவங்களை எழுதுக.

1. ........................................
2. ........................................
3. ........................................
4. ........................................

[பக். 8 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**46.** ஆகக்கூடிய சரக்கிருப்பு மட்டத்தைக் கணிப்பிடும்போது கருத்திற்கொள்ள வேண்டிய **நான்கு** காரணிகளை எழுதுக.

1. ..........................................................................................
2. ..........................................................................................
3. ..........................................................................................
4. ..........................................................................................

**47.** பின்வரும் குறியீடுகள் மூலம் இனங்காணப்படுவது யாது ?

1. ® ..........................................................................................
2. € ..........................................................................................
3.  ..........................................................................................
4.  ..........................................................................................

**48.** நுகர்வோர் நோக்கில் இருந்து, சந்தைப்படுத்தற் கலவையில் உள்ளடங்கும் **நான்கு** மாறிகளையும் குறிப்பிடுக.

1. ........................................ 2. ........................................
3. ........................................ 4. ........................................

**49.** தகவல் முறைமை ஒன்றின் **நான்கு** பிரதான தொழிற்பாடுகளையும் எழுதுக.

1. ........................................ 2. ........................................
3. ........................................ 4. ........................................

**50.** நிதித் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கான **நான்கு** தேவைப்பாடுகளை எழுதுக.

1. ..........................................................................................
2. ..........................................................................................
3. ..........................................................................................
4. ..........................................................................................

* * *

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk

agaram.lk

www.agaram.lk

14411



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

| | | |
|---|---|---|
| ව්‍යාපාර අධ්‍යයනය II<br>வணிகக் கல்வி II<br>Business Studies II | 32 T II | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours |

**அறிவுறுத்தல்கள்:**

* ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக் குறைந்தது **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

**1.** (i) (அ) வணிகமொன்றின் அடிப்படைத் தொழிற்பாடுகள் (நடவடிக்கைகள்) **நான்கைக்** குறிப்பிடுக.

(ஆ) வாடிக்கையாளர்களும் போட்டியாளர்களும் தனித்தனியே வணிகமொன்றுக்கு எவ்வாறு வாய்ப்பாகவும் அச்சுறுத்தலாகவும் அமைவார்கள் என்பதனை எடுத்துக்காட்டக்கூடியவாறு ஒவ்வோர் உதாரணம் வீதம் எழுதுக. (04 புள்ளிகள்)

(ii) (அ) வணிகர் ஒருவர் வங்கியில் இருந்து பெற்றுக்கொண்ட கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறுமிடத்து அது வங்கிக்கும் வணிகருக்கும் ஏற்படுத்தக்கூடிய பாதிப்பைக் குறிப்பிடுக.

(ஆ) நிறுவன கலாசாரத்தின் பலம், பலவீனம் ஆகியவற்றுக்கு ஒவ்வோர் உதாரணம் தருவதன் மூலம் விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) பின்வரும் பேரண்டச் சூழல் காரணிகளுக்கிடையிலான இடைத்தொடர்பை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருவதன் மூலம் சுருக்கமாக விளக்குக.

(அ) இயற்கைச் சூழல் - சமூக கலாசாரச் சூழல்

(ஆ) அரசியற் சூழல் - பொருளாதாரச் சூழல் (04 புள்ளிகள்)

(iv) (அ) ஊழியர்களின் நோக்கில் தொழில்தருனர்கள், ஊழியர்கள் சார்பான தம் பொறுப்புக்களை நிறைவேற்றவில்லையெனக் கருதத்தக்க **இரண்டு** சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

(ஆ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வகையில் பேருந்து நடாத்துனர் ஒருவரும் பயணி ஒருவரும் பேருந்தில் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறிகள் **இரண்டு** வீதம் எழுதுக. (04 புள்ளிகள்)

(v) இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பயிர்களில் ஒன்றான தேயிலைக் கைத்தொழிலின் மூலமான பொருளாதாரப் பங்களிப்பு படிப்படியாகக் குறைந்து செல்வதற்கான **இரண்டு** பிரதான காரணங்களை விபரிக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**2.** (i) (அ) "அரசாங்கமானது பல்வகைப்பட்ட வரிகளை விதிக்கின்றது." இவ்வாறு வரிகளை விதித்தல் வணிகங்கள் மீது ஏற்படுத்தும் தாக்கத்தைச் சுருக்கமாக விளக்குக.

(ஆ) நாணயக் கொள்கையை அமுல்படுத்துகையில் இலங்கை மத்திய வங்கியால் கடன் நிபந்தனைகள் விதிக்கப்படுவதற்கான நோக்கங்கள் **இரண்டை** விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) (அ) நுகர்வோரின் உரிமையை உறுதிப்படுத்துவதன் மூலம் வணிகர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய **இரண்டு** அனுகூலங்களை விளக்குக.

(ஆ) நபர் ஒருவர் தனது மகளின் பெயரைப் பயன்படுத்தி 'யசோதா உணவு விற்பனைச் சேவை' என்ற ஒரு வணிகத்தை ஆரம்பிப்பின் அதற்குப் பிரயோகிக்கத்தக்க சட்டரீதியான தேவைப்பாடு எது? (04 புள்ளிகள்)

(iii) (அ) பங்குடைமை வணிகத்தை ஆரம்பிப்பதிலும் பார்க்க தனியுடைமை வணிகத்தை ஆரம்பிப்பது சிறந்ததாகும் என நபரொருவர் கருதினார். இக்கருத்துடன் உடன்படுவதற்கான **இரண்டு** காரணங்கள் தருக.

(ஆ) வரையறுத்த பொதுக் கம்பனி ஒன்றுடன் ஒப்பிடுகையில் வரையறுத்த தனியார் கம்பனி ஒன்றின் **இரண்டு** பிரதிகூலங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) பொதுமக்கள் மத்தியில் கூட்டுறவு இயக்கங்களைப் பிரபல்யமடையச் செய்வதற்கு நீர் பிரேரிக்கக்கூடிய **நான்கு** ஆலோசனைகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(v) "ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு முயற்சியாண்மை பங்களிப்புச் செய்கின்றது." உதாரணங்கள் தருவதன் மூலம் இக்கருத்தை விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



3\. (i) (அ) தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் வணிகமொன்றை வாங்குவதன் மூலம் வணிகர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய **இரண்டு** அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(ஆ) முயற்சியாண்மைத் திறன்கள் **நான்கை** விபரிக்குக. (04 புள்ளிகள்)

(ii) "பெருமளவிலான சிற்றளவு வணிகங்கள் மிகவும் குறுகிய காலத்தில் தோல்வியடைகின்றன." சிற்றளவு வணிகங்கள் தோல்வியடைவதற்கான **நான்கு** காரணங்களைத் தருவதன் மூலம் இக்கருத்தை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) (அ) சில வாடிக்கையாளர்கள் தன்னியக்க இயந்திர அட்டைகளை (ATM Cards) வைத்திருக்கின்ற போதிலும் பெரும்பாலானவர்கள் பணத்தை மீளப்பெறுவதற்காக வங்கிக் கருமபீடத்துக்குச் செல்கின்றார்கள் என அளவையாய்வு (Survey) ஒன்று வெளிப்படுத்தியுள்ளது. வாடிக்கையாளர்கள் ATM அட்டைகளைப் **பயன்படுத்தாமல்** இருப்பதற்கான **இரண்டு** காரணங்களை எடுத்துக்காட்டுக.

(ஆ) நிதிக் கம்பனிகளின் **இரண்டு** பணிகளைக் குறிப்பிட்டு, அவை வணிகங்களின் வளர்ச்சிக்கு எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றன என்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) (அ) நடைமுறைக் கணக்குகளைப் பயன்படுத்துவதன் மூலம் வணிகர்களுக்குக் கிடைக்கத்தக்க **இரண்டு** அனுகூலங்களை விளக்குக.

(ஆ) இன்று கையடக்கத் தொலைபேசிகள் பல்வேறுபட்ட பணிகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. வணிக நடவடிக்கைகளுக்காகக் கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்தக்கூடிய **நான்கு** சந்தர்ப்பங்களுக்கு உதாரணங்கள் தருக. (04 புள்ளிகள்)

(v) (அ) வாடிக்கையாளர் ஒருவர் வரவு அட்டையிலும் பார்க்க கடன் அட்டையைப் பயன்படுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய **இரண்டு** நன்மைகளை எழுதுக.

(ஆ) காப்புறுதியின் மூலம் வணிக நிறுவனங்களுக்குக் கிடைக்கும் **இரண்டு** அனுகூலங்களை விபரிக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

4\. (i) இவ்வாண்டின் பாடசாலை விவாதத் தொனிப்பொருள் "வணிக வளர்ச்சிக்காக வீதி அபிவிருத்தியிலும் பார்க்க புகையிரதப் பாதையை அபிவிருத்தி செய்வது மிகவும் அனுகூலமானது" என்பதாகும். பாடசாலையில் விவாத அணியின் ஒரு அங்கத்தவரென்ற வகையில் இத்தொனிப்பொருளுக்கு ஆதரவாகவும் எதிராகவும் நீர் முன்வைக்க எதிர்பார்க்கும் **இரண்டு** கருத்துகள் வீதம் விபரிக்குக. (04 புள்ளிகள்)

(ii) (அ) நேருக்கு நேரான வாய்மொழிமூலத் தொடர்பாடலினால் ஏற்படத்தக்க **நான்கு** பிரச்சினைகளைக் குறிப்பிடுக.

(ஆ) இணையத்தின் மூலமான கடிதத்தொடர்புகளின் (தபாலின்) **இரண்டு** அனுகூலங்களையும் **இரண்டு** பிரதிகூலங்களையும் எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) (அ) விவசாய உற்பத்திகளின் விலை உயர்வுக்கு விவசாயிகளும் வணிகர்களும் பொறுப்புடையவர்களாவர் என்பதனை உதாரணங்கள் தருவதன் மூலம் விளக்குக.

(ஆ) சர்வதேச சந்தையில் நுழையும்போது உள்நாட்டு வணிகர்கள் முகங்கொடுக்க நேரிடும் **நான்கு** இடையூறுகளை விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) சர்வதேச வர்த்தக உடன்படிக்கைகள் மூலம் வணிகங்களுக்குக் கிடைக்கக்கூடிய **இரண்டு** அனுகூலங்களையும் **இரண்டு** பிரதிகூலங்களையும் விளக்குக. (04 புள்ளிகள்)

(v) (அ) இலத்திரனியல் வர்த்தகத்தினால் வணிகர் ஒருவர் பெற்றுக் கொள்ளக்கூடிய **இரண்டு** அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(ஆ) இலத்திரனியல் வர்த்தகத்தினால் வாடிக்கையாளர் ஒருவருக்குக் கிடைக்கும் **இரண்டு** பிரதிகூலங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

## பகுதி II

5\. (i) (அ) முகாமையாளர் ஒருவரின் நபர்களுக்கிடையிலான (ஆளிடை) வகிபாகமொன்றைத் தெரிவுசெய்து, அவ்வகிபாகத்தில் நிறைவேற்ற வேண்டிய **இரண்டு** நடவடிக்கைகளை உதாரணங்களுடன் விபரிக்குக.

(ஆ) முகாமைசார் தீர்மானங்களை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்குத் தேவையான **இரண்டு** காரணிகளைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) (அ) வேலைச் சிறப்புத்தேர்ச்சியின் மூலம் ஊழியர் ஒருவருக்கு ஏற்படத்தக்க **இரண்டு** பிரதிகூலங்களை விபரிக்குக.

(ஆ) "நிறுவனமொன்றின் வெற்றிக்குச் சிறந்த தலைமைத்துவமொன்று அத்தியாவசியமானதாகும்." இக்கருத்தை காரணங்கள் தந்து நியாயப்படுத்துக. (04 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



(iii) (அ) உற்பத்திப்பொருள் தொடர்பான குறைபாடுகளைச் சீர்செய்வதற்கு பிந்திய மீளூட்டல் கட்டுப்பாட்டுக் கட்டத்தில் (Post feedback control stage) எடுக்கக்கூடிய **இரண்டு** நடவடிக்கைகளைச் சுருக்கமாக விபரிக்குக.

(ஆ) உற்பத்தி முறையைத் தெரிவுசெய்கையில் நிறுவனமொன்று கருத்திற்கொள்ள வேண்டிய **நான்கு** நியதிகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) (அ) வணிகமொன்றின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் வெற்றியில் உற்பத்தி ஆய்வு அபிவிருத்தி தாக்கம் செலுத்தும் **நான்கு** விதங்களை விபரிக்குக.

(ஆ) பாய்ச்சல் உற்பத்தியின் **இரண்டு** சிறந்த பண்புகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(v) (அ) சரக்கிருப்புக் கட்டுப்பாட்டின் மூலம் வணிகமொன்றுக்கு கிடைக்கத்தக்க **இரண்டு** அனுகூலங்களை விபரிக்குக.

(ஆ) நிறுவனமொன்றின் ஊழிய உற்பத்தித்திறனை அதிகரிக்கச் செய்வதற்கான **இரண்டு** முறைகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**6.** (i) (அ) சமூகம் சார்ந்த சந்தைப்படுத்தலின் (societal marketing) **இரண்டு** முக்கிய குணவியல்புகளை விபரிக்குக.

(ஆ) சந்தைப்படுத்தற் கலவையில் 'இடம்' (விநியோகம்) என்ற மாறியில் காணப்படும் **இரண்டு** கூறுகளைச் சுருக்கமாக விபரிக்குக. (04 புள்ளிகள்)

(ii) (அ) வானொலிப்பெட்டியை உதாரணமாகக் கொண்டு 'எதிர்பார்க்கப்பட்ட உற்பத்திப்பொருள்' என்ற எண்ணக்கருவை விளக்குக.

(ஆ) உற்பத்திப்பொருளொன்றின் சுட்டுத்துண்டின் (Label) மூலம் வாடிக்கையாளர் ஒருவர் அறிந்து கொள்ளத்தக்க **நான்கு** தகவல்களைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(iii) (அ) மிகச் சிறந்த விநியோக வழிமுறை ஒன்றைத் தெரிவுசெய்யும்போது வணிகர் ஒருவர் கருத்திற்கொள்ள வேண்டிய பிரதான காரணிகள் **இரண்டைச்** சுருக்கமாக விபரிக்குக.

(ஆ) சவர்க்கார உற்பத்தியாளர் ஒருவர் சவர்க்காரங்களின் விற்பனையை அதிகரிக்கச் செய்வதற்குப் பயன்படுத்தக்கூடிய **நான்கு** வழிகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) (அ) நிதி முகாமையின் பிரதான நோக்கங்கள் **இரண்டை** எடுத்துக்காட்டுக.

(ஆ) கடனொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக நிதி நிறுவனத்தைத் தெரிவுசெய்கையில் வணிகர் ஒருவரால் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய **நான்கு** காரணிகளைச் சுருக்கமாக விபரிக்குக. (04 புள்ளிகள்)

(v) பின்வரும் நிதி விகிதங்களின் எதிர்பார்க்கப்பட்ட மற்றும் உண்மையான நிலைமைகளை ஒப்பிடுவதன் மூலம் அது தொடர்பான உமது கருத்துகளைத் தந்து, எதிர்பார்க்கப்பட்ட நிலையை அடைவதற்காக ஒவ்வொரு நிலைமைகளின்போதும் எடுக்க வேண்டிய ஒரு நடவடிக்கை வீதம் ஆலோசிக்குக. (விடைத்தாளில் உமது கருத்துகளையும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் மாத்திரம் எழுதவும்.)

| விகிதம் | எதிர்பார்க்கப்பட்ட நிலைமை | உண்மையான நிலைமை | கருத்து | எடுக்க வேண்டிய நடவடிக்கை |
|---|---|---|---|---|
| 1. சரக்குப் புரள்வு (தடவைகள்) | 4 | 1 | | |
| 2. கடன் சேகரிப்பு (தடவைகள்) | 4 | 2 | | |

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**7.** (i) (அ) மனிதவளத் தேவையை எதிர்வுகூறும்போது கருத்திற்கொள்ள வேண்டிய **நான்கு** விடயங்களை எழுதுக.

(ஆ) தொழில் ஒன்றிற்கான விண்ணப்பத்திலிருந்து நேர்முகப்பரீட்சைக் குழுவொன்று விண்ணப்பதாரியொருவர் பற்றி பெற்றுக்கொள்ளக்கூடிய **நான்கு** முக்கியமான தகவல்களை எழுதுக. (04 புள்ளிகள்)

(ii) நேர்முகப்பரீட்சை ஒன்றில் சிலவேளைகளில் வேலைக்கான சரியான நபரைத் தெரிவுசெய்வது சிக்கலானதாகலாம். அத்தகைய சிக்கல்கள் தொடர்பில் தாக்கம் செலுத்தக்கூடிய **நான்கு** காரணிகளைச் சுருக்கமாக விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iii) (அ) செயற்றிறன் மதிப்பீட்டின் மூலம் ஊழியர் ஒருவருக்குக் கிடைக்கத்தக்க **இரண்டு** அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(ஆ) தொழில் வழங்குனர் - தொழில் பெறுநர் உறவைச் சிறந்த முறையில் பேணுவதற்குத் தொழிற்சங்கமொன்று மேற்கொள்ள வேண்டிய **இரண்டு** நடவடிக்கைகளை எடுத்துக்காட்டுக. (04 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



(iv) வணிகமொன்றின் நாளாந்த செயற்பாட்டு நடவடிக்கைகள் பற்றிய தகவல்களைக் கொண்ட பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள வணிகப் பிரிவு / திணைக்களங்கள் மற்றும் கொடுக்கல்வாங்கல் செயன்முறைப்படுத்தல் முறைமை (Transaction Processing Systems) ஆகிய தகவல்களைக் கருத்திற்கொண்டு ①, ②, ③, ④ என இலக்கமிடப்பட்ட இடங்களுக்குரிய விடைகளை மாத்திரம் உமது விடைத்தாளில் எழுதுக.

| **வணிகப் பிரிவு / திணைக்களம்** | **கொடுக்கல்வாங்கல் செயன்முறைப்படுத்தல் முறைமை** |
|---|---|
| ..........①.......... | மூலப்பொருட்கள் கொள்வனவு செய்தல் |
| மனித வளங்கள் | ..........②.......... |
| ..........③.......... | விலையிடல் |
| கணக்குகள் | ..........④.......... |

(04 புள்ளிகள்)

(v) (அ) சிறந்த தகவல் ஒன்றின் **நான்கு** குணவியல்புகளைக் குறிப்பிடுக.

(ஆ) வணிக நிறுவனமொன்றுக்கு தகவல் தொடர்பாடல் தொழினுட்பப் (ICT) பயன்பாட்டின் மூலம் கிடைக்கத்தக்க **நான்கு** நன்மைகளை எடுத்துக்காட்டுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**8.** (i) சுருக்கமாக விபரிக்குக.

(அ) இலத்திரனியல் மகாநாடு (e - conference)

(ஆ) எழுத்து வடிவிலான உரையாடுதல் (Text chatting)

(இ) குரல் வழி உரையாடுதல் (Voice chatting)

(ஈ) காணொளி மூலம் உரையாடுதல் (Video chatting) (04 புள்ளிகள்)

(ii) இலத்திரனியல் தகவல் முறைமை ஒன்றின் ஏதேனும் **நான்கு** கூறுகளைப் பற்றிச் சுருக்கமாக விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iii) (அ) வணிகத் திட்டம் ஒன்றின் தேவைக்கான **இரண்டு** காரணங்களை எழுதுக.

(ஆ) பல்வேறு வணிகக் கருத்துக்களிலிருந்து அமுல்படுத்தக்கூடியதும் இறுதியானதும் முடிவானதுமான வணிகக் கருத்தைத் தெரிவுசெய்யும் செயன்முறையின் படிமுறைகளைக் கருத்திற்கொண்டு பின்வரும் குறிப்பைப் பூரணப்படுத்துக. (உமது விடைத்தாளில் இக்குறிப்பை வரைந்து விடையளிக்குக.)

| **பகுப்பாய்வின் தன்மை** | | **மதிப்பீட்டிற்காகப் பயன்படுத்தும் காரணி வகை** |
|---|---|---|
| 1. .............................. | → | .............................. |
| 2. .............................. | → | .............................. |

(04 புள்ளிகள்)

(iv) (அ) வணிகமொன்றின் நிதித் திட்டத்தில் உள்ளடங்க வேண்டிய **இரண்டு** பிரதான பகுதிகளைப் பெயரிடுக.

(ஆ) உற்பத்தியல்லாத கிரயங்களுக்கு **நான்கு** உதாரணங்கள் எழுதுக. (04 புள்ளிகள்)

(v) வணிகமொன்றை ஆரம்பிக்க எதிர்பார்க்கும் நபர் ஒருவர் நிதிப் பகுப்பாய்வை மேற்கொள்வதன் மூலம் எடுக்கத்தக்க தீர்மானங்கள் **இரண்டை** விபரிக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

* * *

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk